# <u>கூடுதல் மாவட்ட நீதிமன்றம், சிவகங்கை.</u>

## <u>MCOP.No.304/2018</u>

2023-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 16-ம் நாள் புதன்கிழமை **ம.சா.2**-ன் வாக்கு மூலம் (1969-ம் ஆண்டு 54-வது பிரிவின் ஏற்பாட்டின் படி) மொழிப்பெயர்ப்பாளர் திரு.எஸ்.சுரேஷ்குமார் என்பவரால் ஆணையிட்டு உறுதிகூறி வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | சரவணன் | **வட்டம்** | சிவகங்கை |
| **த.பெ** | லோகநாதன் | **சமயம்** | இந்து |
| **கிராமம்** | வீழனேரி | **வயது** | 40/2023 |

**<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு குறுக்கு விசாரணை:</u>**

எனக்கு சாட்சியம் அளிப்பதற்கு நீதிமன்றத்திலிருந்து எந்த அழைப்பாணையும் வரவில்லை என்றால் சரிதான். விபத்து நடந்ததாக சொல்லப்படும் இடம் ராமலிங்கபுரம் விலக்கு பஸ் ஸ்டாப் என்றால் சரிதான். மேற்படி ராமலிங்கபுரம் விலக்கு பஸ் ஸ்டாப் சிவகங்கை - மதகுபட்டி மெயின் ரோட்டில் உள்ளது. விபத்து சமயத்தில் சம்பவயிடத்திற்கு நான் சென்ற காரணத்தை எனது நிரூபணவாக்கு மூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான். விபத்து நடந்த ரோட்டின் அகலம் எனக்கு தெரியாது இரண்டு பேருந்துகள் செல்லலாம். மெயின் ரோட்டின் இருபுற ஓரமும் மண் ரோடு உள்ளது என்றால் சரிதான். அந்த மண் ரோட்டின் அகலம் சுமாராக 5 அடி இருக்கும். பொதுவாக ராமலிங்கபுரம் விலக்கு அருகில் டவுன் பஸ்ஸை தவிர மற்ற பேருந்துகள் நிற்காது. மேற்படி விபரத்தை நான் எனது நிரூபணவாக்குமூலத்தில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். அந்த ராமலிங்கபுரம் விலக்கு அருகில் நிறைய சிறிய ஊர்கள் இருப்பதால் பேருந்துகள் நின்று தான் செல்லும் என்றால் 5 ஊர்கள் தான் உள்ளது அதனால் டவுன் பஸ் மட்டும் தான் அங்கு நின்று செல்லும். விபத்தில் இறந்து போனவரின் பெயர் எனக்கு அப்போதே தெரியும். அவர் எனக்கு உறவினர் அல்ல. விபத்தில் இறந்து போனவர் எங்கள் ஊரிலிருந்து 10 கி.மீ தொலைவில் ஊர்காரர். அவரின் குடும்ப உறுப்பினர்கள் எனக்கு அறிமுகமானவர்கள் என்று சொன்னால் அவரைத் தெரியும் அவரது மகனை தெரியும். அவருடைய இரண்டு மகன்களையும் எனக்கு தெரியும். நான் பஞ்சாயத்து யூனியன் கவுன்சிலராக இருந்தேன். இறந்து போனவர் கருப்பையாவின் மகன்கள் இருவரும் எனக்கு தேர்தலில் வேலை பார்த்ததால் தான் அவர்களுக்கு சாதகமாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல

அவர்கள் ஊர் எனது கவுன்சில் லிமிட்டில் வரவில்லை. இறந்து போன கருப்பையா வாகனத்தில் வரும் போது அலைபேசி பேசிக் கொண்டு வந்தார் என்றால் சரியல்ல. விபத்து சம்பந்தமாக நான் புகார் கொடுக்கவில்லை என்றால் சரிதான். விபத்து சம்பந்தமாக கருப்பையா மகன் கார்த்திக் கொடுத்த புகாரை நான் படித்துப் பார்த்தேனா என்றால் படிக்கவில்லை. அந்த புகாரில் நான் விபத்தை பார்த்தாக குறிப்பிட்டு கூறவில்லை என்றால் எனக்கு தெரியாது நான் அந்த மனுவை படிக்கவில்லை. விபத்து நடந்ததாக சொல்லப்படுகிற இடம் ரோட்டின் மையப் பகுதியில் நடைபெற்றது என்று சொன்னால் சரியல்ல மதகுபட்டியிலிருந்து வரும் போது ரோட்டின் இடதுபுறம் தான் விபத்து நடந்தது. விபத்தானது ரோட்டின் மையப்பகுதியில் தான் நடைபெற்றது என்றும் நான் மனுதாரர்களுக்கு ஆதரவாக ரோட்டின் இடது ஓரம் தான் விபத்து நடந்தது என்று பொய் சொல்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. ராமலிங்கபுரம் விலக்கு தெற்கே ராஜாஊரணி உள்ளது என்று சொன்னால் சரிதான். சம்பவயிடத்திற்கு வடக்கே திருப்பத்தூர் செல்லக்கூடிய மெயின் ரோடு உள்ளது என்றால் சரிதான். வடக்கேயிருந்து நிறைய வாகனங்கள் போகும் போக்குவரத்துகள் உள்ளது என்றால் சரிதான். அதனால் அந்த இடத்தில் இந்த பேருந்தானது வேகமாக செல்ல முடியாது என்றும் மெதுவாக தான் செல்ல முடியும் என்றும் சொன்னால் சரியல்ல. கண்ணப்பா ரோடுவேஸ் என்பது தனியார் பேருந்து என்றால் சரிதான். மேற்படி தனியார் பேருந்து ராமலிங்கபுரம் விலக்கு பஸ் ஸ்டாப்பில் நின்று தான் செல்லும் என்றால் சரியல்ல. தொலை தூரமாக செல்லும் பேருந்துகள் தான் அங்கு நிற்காது என்றும் மற்ற பேருந்துகள் அனைத்தும் அங்கு நின்று தான் செல்லும் என்றும் சொன்னால் சரியல்ல. இந்த விபத்தானது இறந்து போன கருப்பையாவின் அஜாக்கிரதையினால் தான் ஏற்பட்டது என்றால் சரியல்ல. செல்பேன் பேசிக் கொண்டு பேருந்து வருவதை கவனிக்காமல் கருப்பையா தான் சென்று பேருந்து மீது மோதிவிட்டார் என்று சொன்னால் சரியல்ல. இந்த மனுதாரர்களுக்கு ஆதரவாக இந்த விபத்தை நேரில் பார்க்காமலேயே பார்த்ததாக எனது நிரூபணவாக்குமூலத்தில் கூறியிருப்பது தவறு என்று சொன்னால் சரியல்ல.